www.freetnbooks.com

# காலாண்டுத் தேர்வு-2025

வகுப்பு : **10**
காலம் : 3.00 மணி

## தமிழ்

பதிவு எண் :
மொத்த மதிப்பெண்கள் : 100

**குறிப்புகள் :**

❖ மாணாக்கர்கள் தேர்வு நேரத்தை முழுமையாகப் பயன்படுத்தி விடைகளை எழுத்துப் பிழைகள் மற்றும் அடித்தல் திருத்தலின்றி தெளிவாகவும், நேர்த்தியாகவும் எழுதுதல் வேண்டும்.

❖ விடைகள் பொருள் மாறாமல் மாணவர்களது சொந்த நடையில் இருத்தல் வேண்டும்.

❖ தேர்வெழுத நீலம் அல்லது கருப்பு நிற மையினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

### பகுதி -I

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**II. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் சரியான விடையினைக் குறியீட்டுடன் சேர்த்து எழுதவும்.** **15x1=15**

1. உவப்பின் காரணமாக அஃறிணையை உயர்திணையாகக் கொள்வது
அ) இடவழுவமைதி ஆ) பால் வழுவமைதி இ) திணை வழுவமைதி ஈ) கால வழுவமைதி

2. காலில் அணியும் அணிகலனைக் குறிப்பது ..............
அ) சுட்டி ஆ) கிண்கிணி இ) குழை ஈ) சூழி

3. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிப்பது ........
அ) குலைப்பெயர் வகை ஆ) மணிப்பெயர் வகை
இ) கிளைப்பெயர் வகை ஈ) இலைப்பெயர் வகை

4. 'அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்' என்னும் அடியில் அல் என்னும் சொல்லின் பொருள் யாது ?
அ) அல்லி ஆ) இரவு இ) அன்பு ஈ) விருந்தினர்

5. பரிபாடல் அடியில் 'விசும்பில், இசையில்' ஆகிய சொற்கள் குறிப்பவை எவை ?
அ) வானத்தையும், பாட்டையும் ஆ) வான்வெளியில், பேரொலியில்
இ) வானத்தில், பூமியையும் ஈ) வானத்தையும், பேரொலியையும்

6. படர்க்கைப் பெயரைக் குறிப்பது எது ?
அ) யாம் ஆ) நீவிர் இ) அவர் ஈ) நாம்

7. 'கத்தும் குயிலோசை – சற்றே வந்து
காதில் பட வேண்டும்'– பாரதியார்.
இப்பாடலடியில் இடம் பெற்றுள்ள வழுவமைதி ?
அ) திணை வழுவமைதி ஆ) பால் வழுவமைதி
இ) மரபு வழுவமைதி ஈ) கால வழுவமைதி

8. கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது. வானம் இருண்டது. வாடைக்காற்று வீசியது – என்ற' நயமிகு தொடருக்கு ஏற்ற தலைப்பு ............
அ) வனத்தின் நடனம் ஆ) மிதக்கும் வாசம்
இ) மொட்டின் வருகை ஈ) காற்றின் பாடல்

9. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.

| | |
|---|---|
| அ) கொண்டல் | – 1. மேற்கு |
| ஆ) கோடை | – 2. தெற்கு |
| இ) வாடை | – 3. கிழக்கு |
| ஈ) தென்றல் | – 4. வடக்கு |

அ) 1, 2, 3, 4 ஆ) 3, 1, 4, 2 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2

10. திருக்குறள் பொருட்பாலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை ....................
அ) 25 ஆ) 38 இ) 70 ஈ) 10


www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

11. காசிக்காண்டம் என்பது ............
அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல் ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறு பெயர்
இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல் ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி.

விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்
கரு வளர் வானத்து இசையில் தோன்றி
உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்;
உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்
செந்தீச் சுடரிய ஊழியும்

12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது ?
அ) மேகம் ஆ) பரிபாடல் இ) சிலப்பதிகாரம் ஈ) தேம்பாவணி
13. இப்பாடலின் ஆசிரியர் யார் ?
அ) நாகூர் ரூமி ஆ) இளங்கோவடிகள் இ) கம்பர் ஈ) கீரந்தையார்
14. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்கள் யாவை ?
அ) ஊழ், ஊழ் ஆ) உரு, உந்து இ) கரு, உரு ஈ) விசும்பில், இசையில்
15. ஊழி என்பதன் பொருள் யாது ?
அ) யுகம் ஆ) வானம் இ) இரவு ஈ) முறை

## பகுதி-II பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**21ஆம் வினாவுக்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** 4x2=8

16. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
அ) பரஞ்சோதி முனிவர் திருமறைக்காட்டில் பிறந்தவர்.
ஆ) நறுந்தொகை வெற்றி வேற்கை என்று அழைக்கப்படுகிறது.
18. சொல் வளத்தை உணர்த்தும் நெல் வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
19. மொழிபெயர்ப்பின் பயன் குறித்து எழுதுக.
20. செங்கீரை ஆடுதலில் எந்தெந்த அணிகலன்கள் சூட்டப்படுவதாக முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் குறிப்பிடுகிறது ?
21. "பல்லார்" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5x2=10

22. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.
அ) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும் ஆ) கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.
23. பழமொழிகளை நிறைவு செய்க.
அ) ஒரு பானை ........................ ஆ) விருந்தும் ..................
24. கிளர்ந்த – பகுபத உறுப்பிலக்கணம் தருக.
25. கலைச்சொற்கள் தருக.
அ) Baby Shower ஆ) Land breeze

**குறிப்பு - செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**
கூட்டப் பெயர்களை எழுதுக. அ) ஆடு ஆ) பழம்

26. சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.
"தேணிலே ஊரிய செந்தமிழின் – சுவை
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே என்னுயிர் உல்லவும் – நிதம்
ஒதி யுணர்ந்தின் புருவோமே"
27. இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்கவும்.
அ) மலை – மாலை ஆ) விடு – வீடு
28. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களின் வகையைக் கண்டறிந்து விரித்து எழுதுக.



ks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

## பகுதி-III பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2x3=6**

29. பல துறைகளின் வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு எவ்வாறு பயன்படுகிறது ?

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தமிழர் போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர் புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமைக் குறிக்கிறது. போரின் கொடுமையில் இருந்து பசு, பார்ப்பனர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு புறப்பாடல் கூறுகிறது. தம்மை விட வலிமை குறைந்தவரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்.

அ) தமிழரின் போர் அறம் யாது ? ஆ) ஆவூர் மூலங்கிழாரின் கூற்று என்ன ?
இ) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு யாது ?

31. 'தனித்து உண்ணாமை' என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படையாக அமைந்தது. இப்பண்பு இக்காலத்தில் அடைந்துள்ள மாற்றங்களைப் பட்டியலிடுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2x3=6**
**34வது வினாவுக்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை ?

33. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

34. அ) "மாற்றம் எனது மானிடத்" எனத் தொடங்கும் காலக்கணிதம் பாடல். **(அல்லது)**
ஆ) " புண்ணியப் புலவீர் யான் " எனத் தொடங்கும் திருவிளையாடற்புராணம் பாடல்.

### பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2x3=6**

35. ஏதேனும் இரண்டு வழுவமைதிகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

36. வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்
கோலொடு நின்றான் இரவு – குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

37. அடிக்கோடிட்டச் சொற்களின் தொடர் வகைகளை எழுதுக.
அ) <u>பழகப் பழக</u> பாலும் புளிக்கும் ஆ) மேடையில் <u>நன்றாகப் பேசினான்</u>. இ) <u>வந்தார் அண்ணன்</u>.

## பகுதி-IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5x5=25**

38. அ) இறைவன் புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவி சாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக. **(அல்லது)**
ஆ) மலர்ந்தும் மலராத பாதிமலர் போல
வளரும் விழி வண்ணமே – வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளந் தென்றலே – வளர்
பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே
– கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும்
கவிதை நயத்தையும் பாராட்டி உரை செய்க.

39. அ) உங்கள் கிராமத்திற்கு நூலக வசதி வேண்டி பொது நூலகத்துறை இயக்குநர் அவர்களுக்குக் கடிதம் வரைக. **(அல்லது)**
ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.



oks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. சென்னை மாவட்டம், கதவு எண், 22 வள்ளுவர் நகரில் வசிக்கும் இராஜேஷ் என்பவரின் மகன் முகுந்தன் 300 ரூபாய் தன் தந்தையிடம் பெற்றுக் கொண்டு நூலக உறுப்பினராக சேர உள்ளார். தேர்வர் தம்மை முகுந்தன் எனக் கருதி உரிய படிவத்தைப் பூர்த்தி செய்க.

42. அ) நவீன உணவு வகைகளை உண்டு உடல் பாதிக்கப்படும் இன்றைய இளம் சமுதாயத்தினருக்கு சமூக அக்கறையுடனான உங்கள் பதிலை ஐந்து வரிகளில் எழுதுக.

ஆ) The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

**குறிப்பு - செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு. தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது. நம் மக்கள் வாழை இலையின் மருத்துவப் பயன்களை அன்றே அறிந்திருந்தனர். உண்பவரின் மனமறிந்து உணவு வகைகளைப் பரிமாறுவர்.

i) தமிழர் பண்பாட்டில் எதற்கு தனித்த இடமுண்டு?

ii) யாருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது?

iii) நம் மக்கள் வாழை இலையின் எந்தப் பயன்களை அறிந்திருந்தனர் ?

iv) உண்பவரின் எந்த நிலையை அறிந்து உணவு பரிமாறுவர் ?

v) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பினை தருக.

## பகுதி-V

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **3x8=24**

43. அ) நாட்டுவளமும் சொல்வளமும் தொடர்புடையது என்பதை பாவாணர் வழிநின்று விளக்குக.

**(அல்லது)**

ஆ உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

44. அ) 'பிரும்மம்' கதை உணர்த்தும் பிற உயிர்களைத் தம் உயிர்போல் நேசிக்கும் பண்பினை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) 'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றிவேற்கை
மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

45. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதித் தலைப்பிடுக.
முன்னுரை – சாலைப் பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு – சாலை விதிகள் – ஊர்தி ஓட்டுனருக்கான நெறிமுறைகள் – விபத்துக்களைத் தவிர்ப்போம் – விழிப்புணர்வு தருவோம் – முடிவுரை.

**(அல்லது)**

ஆ) குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித் தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா வந்து, அந்தாதிக் கூறி கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். இக்கருத்தை கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.



books.com | FREETNBOOKS